**சுருக்கம்**

கலையும் பண்பாடும் – அறிவிப்புகள் – 2018–2019ஆம் ஆண்டு – தமிழக பாரம்பரியக் கலைகளை பாதுகாத்து வளர்த்தல் – மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துதல் – ரூ.64.00 இலட்சம் – நிர்வாக ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் (பண்–2) துறை**

அரசாணை (நிலை) எண். 55

நாள்: 28–05–2019
திருவள்ளுவர் ஆண்டு 2050
விகாரி வருடம், வைகாசி 14

**படிக்கப்பட்டது**

1. அரசாணை (நிலை) எண் 23, தமிழ் வளர்ச்சி பண்பாட்டு (பண் 1–1)த் துறை நாள் 01.02.1994
2. அரசாணை (நிலை) எண் 128, தமிழ் வளர்ச்சி பண்பாட்டு (பண் 1–1)த் துறை நாள் 29.06.1994
3. அரசாணை (நிலை) எண் 225, தமிழ் வளர்ச்சி பண்பாட்டு (பண் 1–1)த் துறை, நாள் 24.10.1994
4. அரசு கடித எண் 1446/பண் 1–1/98–1, நாள் 16.07.1998
5. கலை பண்பாட்டு ஆணையரின் கடித ந.க எண் 3847/இ1/2018, நாள் 18.07.2018

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், கலை மற்றும் பண்பாட்டை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், மாவட்டங்களிலுள்ள நிகழ்த்துக் கலை மற்றும் நுண்கலைகளில் ஈடுபட்டுள்ள இளைய மற்றும் திறமையான கலைஞர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தவும், மாவட்டங்களில் மாவட்டக் கலை மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதற்கென ரூ.1.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாவட்டக் கலை மன்றங்கள் சிறப்புற செயல்படும் வகையில் முதற்கட்ட செலவுகளுக்காக ரூ.4.60 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிட்டது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாவட்டக் கலை மன்ற செயல்பாடுகள் குறித்தும், மாவட்டக் கலை மன்றத்திற்கு மாவட்ட ஆட்சியர் தலைமையில் இதர உறுப்பினர்களை நியமித்தும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட அரசு கடிதத்தின் வாயிலாக, மாவட்ட ஆட்சியரை மாவட்டக் கலை மன்றத்தின் தலைவராகவும், கலை பண்பாட்டுத் துறை உதவி இயக்குநரை உறுப்பு செயலராகக் கொண்ட 14 உறுப்பினர்களுடன் ஏற்கெனவே இருந்த மாவட்டக் கலை மன்றத்தின் உறுப்பினர்கள் அமைப்பில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

5. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25.06.2018 அன்று நடைபெற்ற கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது "தமிழகத்தின் பல்வேறு கலை வடிவங்களை வளர்க்கவும், தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையான கலைஞர்கள் மற்றும் இளைஞர்களை கண்டறிந்து ஊக்கப்படுத்தவும், மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்படும் மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திடவும், ஒரு மாவட்டத்திற்கு ரூ.2 இலட்சம் வீதம், 32 மாவட்டங்களுக்கு தொடரும் செலவினமாக ரூ.64 இலட்சம் நிதியுதவி வழங்கப்படும்" என மாண்புமிகு அமைச்சர், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

6. மேலே ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தமிழகத்தின் பல்வேறு கலை வடிவங்களை வளர்க்கவும், தமிழ்நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையான கலைஞர்கள் மற்றும் இளைஞர்களைக் கண்டறிந்து ஊக்கப்படுத்தவும், மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திட ஒரு மாவட்டத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம், 32 மாவட்டங்களுக்கு தொடரும் செலவினமாக ரூ.64.00 இலட்சம் 2018–2019 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து அரசாணை வழங்குமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

7. கலை பண்பாட்டுத் துறை ஆணையரின் கருத்துருவினை ஆய்வு செய்து, அதனை ஏற்று, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்பினை செயல்படுத்திடும் விதமாகவும், தமிழகத்தில் பல்வேறு கலை வடிவங்களை வளர்க்கவும், தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் திறமையான கலைஞர்கள் மற்றும் இளைஞர்களை கண்டறிந்து ஊக்கப்படுத்தவும், மாவட்ட ஆட்சியரின் தலைமையின் கீழ் செயல்பட்டு வரும் மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்திட, கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, ஒரு மாவட்டத்திற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் 32 மாவட்டங்களுக்கு ரூ.64,00,000/– (ரூபாய் அறுபத்து நான்கு இலட்சம் மட்டும்) க்கான நிர்வாக ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணையிடுகிறது:-

i. நிகழ்த்துக் கலை மற்றும் பிற நுண்கலைகளான இசை, நடனம், நாடகம், பழங்குடியினர் மற்றும் நாட்டுப்புறக் கலைகள், ஓவியம், கைவினை, கட்டடக்கலை, சிற்பக்கலை, வரைகலை மற்றும் பிளாஸ்டிக் கலைகள் போன்ற கலைகளில், பயில்முறைக் கலைஞர்கள் (Amateur Artist) முதல் சிறந்த கலைத்தொழிலர்கள் (Eminent Professionals) மூலமாக பள்ளி அளவிலேயே கலை மற்றும் பண்பாட்டினை மேம்படுத்திட வேண்டும் ;

ii. தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக் குழு, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் மற்றும் இதே குறிக்கோளோடு இயங்கும் பிற மாநில மற்றும் மத்திய அரசாங்கங்களின் சார்பாக மாவட்ட அளவில் அவற்றின் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளை செயல்படுத்திட வேண்டும் ;

iii. கலை பண்பாட்டினை வளர்த்து பாதுகாக்கும் வகையில் மாவட்டக் கலை மன்றங்கள் வாயிலாக கலை விழாக்கள், பயிற்சி முகாம்கள், பயிற்சிப் பட்டறைகள் நடத்திட வேண்டும். கலை பண்பாட்டை ஒரு ஊடகமாக பயன்படுத்தி அதன் வாயிலாக மேம்படுத்தப்பட்ட தகவல்களை பரப்பிட உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்;

iv. பலதரப்பட்ட கலை வடிவங்கள் கொண்ட பள்ளிகளிடையே கருத்துக்களை பரிமாற்றிக் கொள்ளும் வகையில் மாவட்ட, மாநில அளவில் கருத்தரங்குகள், ஆய்வரங்குகள், கலை விழாக்கள், கண்காட்சிகள் நடத்திட வேண்டும். புதிய நாடகங்கள், நாட்டியங்கள், ஓவியங்கள் ஆகியவற்றை படைப்பாக்கம் செய்வதற்கு உதவி செய்தல் மற்றும் ஊக்கமளித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புதிய கலைத்துறைகளில் திறமையானவர்களுக்கு உதவி செய்தல் மற்றும் ஊக்கமளித்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்;

v. மாவட்டங்களில் இசை, நடனம், நாடகம், பாரம்பரிய, பழங்குடியினர், கிராமிய மற்றும் கிராமப்புறக் கலைகள், பாட்டு, ஓவியம், கைவினை, வரைபடக்கலை, பிளாஸ்டிக் கலைகள், சிற்பம் மற்றும் கட்டடக்கலை ஆகியவற்றில் தனியாகவோ அல்லது இதே குறிக்கோளினைக் கொண்ட மற்ற நிறுவனங்களுடன் இணைந்தோ கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கம், விழாக்கள், பயிற்சி முகாம்கள் மற்றும் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட வேண்டும்;

vi. பாரம்பரியக் கலை மற்றும் கைவினை நுட்பங்கள் குறித்த கல்வி அறிவை வளர்த்தல், மண்டல அளவில் கணக்கெடுப்பு நடத்துதல், உள்நாட்டு கைவினைக் கலைஞர்கள், ஓவியர்கள், சிற்பிகள் மற்றும் இசை, நாட்டியம், நாடகம், கிராமியக் கலைகள் ஆகியற்றில் ஈடுபட்டுள்ள நிகழ்த்துக் கலைஞர்கள் ஆகியோர்களை ஊக்குவித்தல் போன்ற மாவட்டக் கலை மன்றத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்;

vii. மாவட்டக் கலை மன்றங்களுக்கென பல்வேறு வகைகளில் நிலம் மற்றும் சொத்து வாங்குதல், அவற்றை பராமரித்தல், விற்பது, அடமானம் வைத்தல் அல்லது அவற்றை அகற்றுதல் போன்ற மாவட்டக் கலை மன்றத்தின் அதிகாரங்களையும் செயல்பாடுகளையும் செயல்படுத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்;

viii. மாவட்டக் கலை மன்றங்கள் தனது செயல்பாடுகளுக்கென நன்கொடை மூலமாகவோ, கலை நிகழ்ச்சிகள் அல்லது கண்காட்சிகள் நடத்துவதன் மூலமாகவோ நிதியினை பெருக்கிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்;

ix. கலை சமுதாயத்தின் நோக்கங்களை மேம்படுத்திட மேற்கூறிய அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு உட்பட்டு அல்லது உட்படாமலோ, தேவைப்படின் பிற செயல்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்;

x. கலை மற்றும் பண்பாட்டை பாதுகாக்கவும், மேம்படுத்தவும், மாவட்டங்களிலுள்ள நிகழ்த்துக் கலை மற்றும் நுண்கலைகளில் ஈடுபட்டுள்ள இளைய மற்றும் திறமையான கலைஞர்களைக் கண்டறிந்து அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் ;

xi. தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், தமிழ்நாடு ஓவிய நுண்கலைக்குழு, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் ஆகியவற்றின் செயல்பாடுகளோடு மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகள் வேறுபட்டிருக்கும் வகையில் அமையப்பெற வேண்டும் ;

8. மாவட்டக் கலை மன்றங்களின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கென ஒப்பளிப்பு செய்யப்படவுள்ள தொகையினைக் கொண்டு இத்திட்டத்தினை செயல்படுத்திட துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களை கேட்டுக் கொள்ளுமாறு கலை பண்பாட்டுத் துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 11262/நிதி(கல்வி–II)துறை / 2019, நாள் 11.03.2019–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வ வர்மா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், கலை பண்பாட்டுத் துறை, சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–9. (இருபடிகள்)
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (G&SSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (E&RSA), சென்னை–18.
முதன்மை கணக்காய்வுத் தலைவர் (A&E), சென்னை–18.
உள்ளுரை தணிக்கை அலுவலர், முதன்மை கணக்காய்வுத் தலைவர்
(பொது மற்றும் சமூக பகுதி) அலுவலகம், சென்னை–9.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
இணை இயக்குநர் / உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையங்கள்,
திருச்சிராப்பள்ளி / தஞ்சாவூர் / மதுரை / திருநெல்வேலி / கோயம்புத்தூர் / சேலம் / காஞ்சிபுரம்
(கலை பண்பாட்டு ஆணையர் வழியாக)

<u>நகல்:-</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை– 9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
சிறப்பு நேர்முக உதவியாளர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் அலுவலகம், சென்னை – 9
அரசு தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச் செயலர், சென்னை–9

அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச்செயலர், நிதித்துறை, சென்னை–9
நிதி (கல்வி–II/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II)த் துறை, சென்னை– 9
அரசு கூடுதல் தலைமைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலர்,
சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை, சென்னை– 9
சுற்றுலா, பண்பாடு (ம) அறநிலையங்கள் (பண்–1 / பொது–2) துறை, சென்னை– 9
இருப்புக் கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

28/5/19

பிரிவு அலுவலர்

28.5.19